23.09.2025 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண். 196 /2019 ) திரு.ராஜகுரு.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை-</u>

1) எனக்கு சொந்த ஊர் கழுகுமலைக்கு மேற்கே உள்ளகே.ஆலங்குளம் என்றால் சரிதான். அது தற்போது தென்காசி மாவட்டம்,திருவேங்கடம் வட்டம் என்றால் சரிதான். எனது அப்பாவை பெற்ற தாத்தா பெயர் சுப்பா நாயக்கர் என்றால் சரிதான். சுப்பா நாயக்கருக்கு கிருஷ்ணசாமி நாயக்கர், நாராயணசாமி நாயக்கர், குருசாமிநாயக்கர், கந்தசாமி ஆகிய 4 ஆண் மக்கள் என்றால் சரிதான். பெண்மக்கள் உண்டா என்றால் 2 பேர்கள் இருந்தார்கள் இறந்துவிட்டார்கள். பெயர் என்னவென்றால் தெரியாது. கிருஷ்ணசாமிநாயக்கர் எனது பெரியப்பா என்றால் சரிதான். அவருக்கு சிதம்பரம்பட்டி கிராமத்தில் உள்ள லட்சுமியம்மாளை திருமணம் முடித்துள்ளார் என்றால் சரிதான். கிருஷ்ணசாமி நாயக்கர் - லட்சுமியம்மாள் என்பவர்களுக்கு கனகம்மாள் என்ற ஒரே பெண் குழந்தை என்றால் சரிதான். கனகம்மாளுக்கு 3 பெண்மக்கள் அதில் ஒரு பெண் பெயர் தான் திருமதி.ஜெயலலிதா 3ம்பிரதிவாதி என்றால் சரிதான். கிருஷ்ணசாமி நாயக்கருக்கும்,லட்சுமியம்மாளுக்கும் கருத்துவேறுபாடு ஏற்பட்டு பிரிந்து வாழ்ந்துவந்தார்கள் என்றால் சரியல்ல. லட்சுமியம்மாள் விருப்பப்பட்டதால் எனது தாத்தா அவருக்கு சொத்து, சுகங்களை வாங்கிக்கொடுத்து சிதம்பட்டியில் வாழ வைத்துவிட்டார். நான் சொல்லுவது வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. கிருஷ்ணசாமி நாயக்கர் பயங்கரமான குடிகாரர் என்றும் கனகம்மாளுக்கு திருமணம் ஆவதற்கு முன்பாகவே இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது தாத்தா சுப்பா நாயக்கருக்குகே. ஆலங்குளம் கிராமத்தில் சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான். அந்த சொத்துக்களை எப்போது பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் கே.ஆலங்குளத்தில் உள்ள சொத்துக்களை எனது தகப்பனாரும், மற்றவர்களும் 2 பாகங்களாக பிரித்துக்கொண்டார்கள். லட்சுமியம்மாளுக்கு வேண்டிய நகைகளை போட்டு சிதம்பரம்பட்டியில் குடி அமைத்துவிட்டார்கள். வீடு,சொத்துக்களை வாங்கி லட்சுமியம்மாள் பெயரில் எனது தாத்தா கொடுத்துவிட்டார். மேற்சொன்ன சங்கதிகள் நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் எனது தகப்பனார் சொல்லி தெரியும்.

2) சுப்பா நாயக்கருக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்களில் லட்சுமியம்மாளுக்கும் அவரது மகள் கனகம்மமாளுக்கு வாரிசு அடிப்படையில் பாத்தியம் உண்டு என்றால்

சரிதான். கனகம்மாள் சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை வழக்கு எண்.அ.வ.எண்.101/2015 எனது அப்பா, பெரியப்பா மீது வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். தாவாச்சொத்திற்கு 1969-லிருந்து 2021 வரை நானோ எனது தகப்பனாரோ அனுபவித்து வந்ததை காட்டக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரிதான் சொந்த இடம் எனது அப்பா வாங்கிய இடம் நாங்கள் தான் அனுபவித்து வந்தோம். தாவாச்சொத்து எனது தகப்பனார் கிரையம் வாங்கியதை காட்டக்கூடிய அசல் ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தொலைந்துவிட்டது. எனது பதில்உறையில் அசல் ஆவணம் காணாமல் போனதாக என்ன ஆகியது என்றுசொல்லவில்லை என்றால் சரிதான். தாவாச்சொத்தின் பட்டா எண்.813 கனகம்மாள் பெயரிலும், பட்டா எண். 902, 3ம்பிரதிவாதி திருமதி.ஜெயலலிதா பெயரிலும் இருந்தது என்றால் சரிதான் அது மோசடியாக மாற்றப்பட்டது. எனது தாத்தா லட்சுமியம்மாளுக்கு சொத்து வாங்கிக்கொடுத்த விவரத்தையும், நகை கொடுத்த விவரத்தையும் சங்கரன்கோவி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பாகப்பிரிவினை வழக்கில் எதிர்வழக்குரையில் நாங்கள் சொல்லவில்லை என்றால் எனது அப்பா அந்த வழக்கில் இருப்பதால் அது பற்றி எனக்கு தெரியாது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
23.09.2025.